செ.வெ.எண் : 31/ மே நாள் : 29.05.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

## நடமாடும் காய்கறி விற்பனை வாகனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி சீட்டுக்களை 07.06.2021 வரை பயன்படுத்திக் கொள்ளலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

இராமமாதபுரம் மாவட்டத்தில், கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தளர்வுகளற்ற முழு ஊரடங்கு காலத்தில் பொது மக்களுக்கு தேவையான காய்கறிகள் மற்றும் பழங்களை குடியிருப்பு பகுதிகளுக்கே நேரடியாகச் சென்று விற்பனை செய்ய ஏதுவாக தோட்டக்கலைத் துறையின் மூலம் நடமாடும் விற்பனை வாகனங்களுக்கு அனுமதி சீட்டுகள் 31.05.2021 வரை செல்லத்தக்கதாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு அரசு முழு ஊரடங்கு நடைமுறையை 07.06.2021 வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளதால், ஏற்கெனவே அனுமதிச் சீட்டு பெற்றுள்ளவர்கள் அதனை 07.06.2021 வரை பயன்படுத்திக் கொள்ளலாம். புதுப்பிக்க வேண்டியதில்லை என அறிவிக்கப்படுகிறது. அனுமதி சீட்டு தொடர்பாக ஏதேனும் இடர்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் இராமநாதபுரம் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அல்லது சம்மந்தப்பட்ட வட்டார உதவி இயக்குநர்களை அனுகலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**